வேலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே ஏறத்தாழ 89 கன அடி தண்ணீர் இப்போது வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே கால்வாய் சரியில்லை என்று சொல்வது அவ்வளவு நல்ல தல்ல. அவரும் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கால்வாய் சீரமைக்கப்படவேண்டும் என்ற அவருடைய கோரிக்கை நியாயம். கால்வாய் சரியில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கிற ஒரு திட்டம் என்கிற நேரத்தில் அந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு அதிகப்படியான நிதி பெற்று அதைச் செயல்படுத்தினால்தான் நிரந்தரமாக இருக்க முடியும் என்ற காரணத்தால் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தை எடுத்துச் செய்ய இன்றைக்கு ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபாய் செலவில் திட்ட மதிப்பீடு தயாரித்து மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகக் கொடுத்திருக்கிறோம். ஆனால் மத்திய அரசின் ஒப்புதல் வருவதற்கு முன்னாலேயே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனே நானே நேரடியாக அந்தப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்த்து யார் சொல்வதில் உண்மை இருக்கிறது என்பதைத் தெரிந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 155. திரு. ச. காந்திராஜன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

155

அழகாபுரி அணைக்கட்டிலிருந்து பாசனத்திற்கு புதிய கால்வாய் வெட்டுதல்.

*277. திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தொகுதி, அழகாபுரி அணைக்கட்டி லிருந்து வேடசந்தூரின் மேற்கு மற்றும் கிழக்குப்பகுதி பாசனத்திற்கு புதியதாக கால்வாய்கள் வெட்டி தண்ணீர் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதியதாக கால்வாய் வெட்டி தண்ணீர் வழங்க சாத்திய கூறுகள் இல்லை.

முற்பகல் 10.15

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணைக்கட்டு என்பது வேடசந்தூர் பகுதியிலே பக்கத்திலே 10 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. இது கொடைக்கானல் மலையிலே அந்த கிழக்குப் பகுதியிலே பெய்கின்ற மழை யின் மூலம் மாங்கரையாறு என்ற ஆற்றின் மூலமாகவும், சிறுமலையில் இருந்து பெய்து வருகின்ற சந்தனவர்த்தினி ஆறு என்ற ஆற்றின் மூலமாகவும் கிடைக்கக்கூடிய தண்ணீர் 1,250 ஏக்கர் நிலத்திலே, அங்கே பரப்பளவிலே நிற்கிறது. அந்தத் தண்ணீர் இப்போது வலதுபுற வாய்க்கால் மூலமாக 54 கிலோ மீட்டர் தொலைவிற்கு, ஏறத்தாழ திருச்சி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. எனவே வேடசந்தூர் என்பது வறட்சி மிக்க பகுதி. மிகவும் குறைவான பலன் அடைகின்ற பகுதியாக இருப்பதால் இந்த வலதுபுற கிழக்குப் பக்க வாய்க்காலை வெட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு கூட்டுமானத் திட்டம் ஏறத்தாழ 9 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலே இன்றைக்கு திட்டமிடப்பட்டு ஏறத்தாழ 12 மில்லியன் கன மீட்டர் ஆக அதனுடைய கொள்ளளவு நிர்ணயிக்கப்பட்டு 1,307 எக்டேர் பாசன வசதிக்கு புஞ்சை நிலங்களுக்கும், நஞ்சை நிலங்களுக்கு 446 எக்டேருக்கு மேலும் இன்றைக்கு பாசன வசதி செய்துகொண்டு இருக்கிறோம். ஆகவே இருக்கின்ற கொள்ளளவு பார்த்துதான் அடுத்த பாசன அமைப்பை நீட்டிக்கமுடியும். ஆகவே தற்போது வருகின்ற அந்த கொள்ளளவு ஏற்கெனவே இருக்கின்ற பாசனத்திற்கு போதும் என்ற அளவிலே இருக்கின்ற காரணத்தினால் அதிகமான பாசன வசதி செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய கொள்ளளவு அதிக அளவிலே இல்லை என்று சொன்னாலும்கூட 1977-லேகூட குடகனாறு அணையில் அதிகமான வெள்ளம் வந்து உடைந்து விட்ட காரணத்தினாலேயே இப்படி அடிக்கடி அந்த கொடைக் கானல் மலையினுடைய கிழக்குப் பகுதியிலே அதிகமான மழை பெய்கின்ற காரணத்தினாலே தண்ணீர் வருவதற்கு

வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து இந்த வறட்சி மிக்க பகுதிக்கு எப்படியாவது இப்போது மரியாதைக் குரிய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது பாலை வனமாக இருக்கின்ற வேடசந்தூர் தொகுதி ஒரு சோலை வனமாக மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வைத்துக் கொள்வதோடு அதை இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனநாறு நீர்த்தேக் கத்தைப் பொறுத்தவரையில் வருகின்ற நீரை கணக்கீடு செய்து இன்றைக்கு அந்த வரவு அளவுக்கு அந்த அணை யினுடைய கொள்ளளவு இருக்கிறது. இருந்தாலும் வருகின்ற கால கட்டங்களிலே இருக்கின்ற நிலைமைகளைக் கண்காணித்து இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கோரிக்கையை கவனத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணை யானது ஆத்தூர் தொகுதி மலையிலே உற்பத்தியாகி வரு கிறது. 30 நாட்களுக்கு முன்பு நானே நேரிலே சென்று, 4 கிலோ மீட்டர் தூரம்நடந்து சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அந்தத் தண்ணீர் மேலேயிருந்து அதிகப் படியான மழை பெய்து வருகிறதுபோது, ஸ்கேட்டர்ட் ஆக பிரிந்து பல இடங்களிலே நிலத்திலே விழுந்து, அது மணல் அடிக்கக்கூடிய நிலைமையில், கிணறுகள் மூடப்படும் நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே எங்கே உற்பத்தியாகின்றதோ அங்கேயே ஒரு அணையைக் கட்டி இந்தத் தண்ணீர் வீணாக இந்த ஏந்தல் கண்மாயிலே பாய்ந்து மறுபடியும் மீண்டும் வைகையிலே விழக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால்—வேடசந்தூர் பகுதி, ஆத்தூர், நிலக்கோட்டை பகுதியிலே தடுத்து தண்ணீர் கிடைப்பதற்கான ஒரு நிலைமை ஏற்படுவதற்கான வழி வகை செய்யமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற குடகனாறு திட்டத்தின் கீழ் இந்தக் கால்வாயை புதிதாக வெட்டி பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கு இந்தக் கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் ஒரு

1991 அக்டோபர் 4]

புதிய யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வருகின்ற தண்ணீரை வீணாக்காமல் புதிய முயற்சியாக ஏதாவதுபாசனத்தை மேம்படுத்த முடியுமா என்ற பிரச்சினையை இங்கே வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு சாத்தியம் இருப்பின் நிச்சயமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 156. செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

156—

புவனகிரித் தொகுதிக்கு நெய்வேலி சுரங்க நீர்.

*306—செல்வி கோ. மல்லிகா :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெய்வேலி 2-வது சுரங்கத்தின் உபரி நீரை புவனகிரி தொகுதி மக்களுக்காக குடிநீராகவும், பாசன நீராகவும் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தினுடைய உபரி நீர் ஏற்கெனவே பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) 1987-ஆம் ஆண்டு ஜூலை முதல் விருத்தாச்சலம் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் உள்ள ஏரிகள் மூலம் 6,590 ஏக்கர்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

ஆகவே புதிதாக வேறு திட்டங்கள் செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கி வரும் கங்கைபோல் வற்றாமல் நீரை வெளியேற்றிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலி சுரங்கப் பகுதிகளில் உள்ள பல்வேறு ஊர்களுக்கு குடிநீராக பயன்படுத்தப்படலாம். வறட்சியில் வாடும் புவனகிரிப் பகுதிக்கு வராததால் அதை அந்த பகுதிக்குத் திருப்பிவிடும் முயற்சி குறித்து நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு மறு ஆய்வு செய்யுமா ?